**Amt für Bildung und Sport**
Fachstelle Sport
Hofstettenstrasse 14, Postfach 145, CH-3602 Thun

Telefon +41 33 225 84 15
sport@thun.ch, www.thun.ch/abs

STADT THUN
**freiwilliger Schulsport**

# தூண் மாநகரத்தின் பாடசாலை விளையாட்டு பயிற்சிவகுப்புகள் பற்றிய பொதுவான தகவல்கள்

குறிக்கோள்: கட்டாயமற்ற பாடசாலைவிளையாட்டு பயிற்சிவகுப்பானது கட்டாய பயிற்சிவகுப்பிற்கும் கழகங்கள் ஊடாக வழங்கும் பயிற்சிவகுப்பிற்கும் ஒரு பாலமாக இயங்குகிறது.இதன் குறிக்கோளானது பல பாடசாலை மாணவர்கள் கட்டாய பயிற்சி வகுப்பிற்கு செல்ல தூண்டபடுகிறார்கள்.இப்பயிற்சிவகுப்புகள் அடிப்படையிலிருந:து வழங்கபடுகிறது. இதன் மூலம் மாணவர்கள் நன்கு புரிந்து கொள்வர்.

பங்குபற்றல்: பாலர்பாடசாலை மாணவர்கள் முதல் பாடசாலை மாணவர்கள் வரை பங்குபற்றலாம்.அவரவர் பிறந்தஆண்டை பொறுத்தது. வருடத்தில் ஒரு தவணைக்கு பல பயிற்சிவகுப்பிற்கு அனுமதிக்கபடுவர்.ஆனால் சிறுவர்களுக்கு ஒரு வகுப்பினை மட்டுமே சிபார்சு செய்கிறார்கள்.

பயிற்சி காலம்: கோடைகாலங்களில் வசந்தகால விடுமுறை முதல் இலையுதிர்கால விடுமுறை வரை(கோடைவிடுமுறை தவிர)
குளிர்காலங்களில் இலையுதிர்கால விடுமுறை முதல் வசந்தகால விடுமுறை வரை( நத்தார் மற்றும் விளையாட்டு விடுமுறை தவிர) நடைபெறும். திங்கள் முதல் வெள்ளி வரை கிழமைக்கு ஒரு தடவை பாடசாலை முடிந்த பின்னர் நடைபெறும்.(16.30 – 19.30 )
புாடசாலை விடுமுறை நாட்களில் பகல் நேரங்களில் நடைபெறும்.

நிர்வாகம்: விளையாட்டு வல்லுணர்களால் நிர்வகிக்கபடுகிறது.

இடம்: நடைபெறும் இடமானது அறிவிக்கபடும்.

கட்டணம்: ஒரு பிள்ளைக்கு ஒரு தவணைக்கு கிட்டதட்ட 50 பிராங். பயிற்சி வகுப்பின் முதல்நாள் செலுத்தவேண்டும்.. விடுமுறைகால பயிற்சி வகுப்பிற்கு ஒரு பிள்ளைக்கு 10 முதல் 40 பிராங். மேலதிக செலவுகள் அறிவிக்கபடும். நீலகாட் வைத்திருப்பவர்களுக்கு இலவசம்.பொருட்செலவுகள் பெற்றோரின் பொறுப்பாகும். தூண் நகரத்தை தவிர்ந்த மற்றைய இடத்து பிள்ளைகள் இரட்டிப்பாக பணம் செலுத்தவேண்டும்.

விண்ணப்பம்: விண்ணப்பபடிவங்கள் தூண் பாடசாலை வகுப்பு ஆசிரியர்கள் மூலம் வழங்கபடும் முடிவு திகதி யும் அவர்கள் மூலம் அறிவிக்கபடும். விண்ணப்பபடிவத்தில் பெற்றோரின் கையொப்பம் அவசியம். தூண் நகர பாடசாலைகளுக்கு சமூகமளிக்காத மாணவர்கள் கீழ் உள்ள இணையதளம் மூலம் நேரடியாக விண்ணப்பபடிவங்களை பதிவிறக்கம் செய்ய முடியும்.
இவர்களின் விண்ணபபடிவங்கள் நேரடியாக தபால் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பலாம்.
பொறுப்பு: இங்கு பங்குபற்றும் மாணவர்களின் விபத்து காப்புறுதி பெற்றோரின் பொறுப்பாகும்.

முக்கிய குறிப்பு: சகல விளையாட்டுபயிற்சி வகுப்பிற்கும் மாணவர்களின் எண்ணிக்கை வரையறுக்கபட்டுள்ளது.எனவே ஒரு பிள்ளை ஒரே வகுப்பிற்கு பல தடவை விண்ணப்பிக்க வேண்டாம் என்று சிபார்சு செய்கிறோம்.ஒரு பயிற்சி வகுப்பிற்கு பங்குபற்றும் பிள்ளைகள் ஒரு குறிப்பிட்டஅளவில் இருக்க வேண்டும்.தனி ஒருவருக்கு அல்ல.
விண்ணப்பம் கிடைத்ததும் உடன் உறுதிபடுத்தல் கிடைக்கபெறமாட்டாது.பயிற்சிவகுப்பு தலைமையகம் உங்களுடன் தொடர்பு கொள்ளாதவரையில் விண்ணப்பம் ஏற்றுகொள்ளபட்டதாகும்.பயிற்சிவகுப்புகள் தொடங்குவதற்கு 1 கிழமைக்கு முன்பு முடிவு தகவல் பட்டியல் வகுப்பு ஆசிரியர்களால் வழங்கபடும்.
தகவல்மையம்:மேலதிக விபரங்களுக்கு
www.thun.ch/sport
Amt für Bildung und Sport
Fachstelle Sport
தொலைபேசி 033 225 84 15
மின்னஞ்சல் sport@thun.ch